DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 494/2024

Miscellaneous :

Sessions : DW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | விஜயராகவன் |
| Father / Husband Name | வேணுகோபால் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.07.2026

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1.** என்னுடைய முதல் விசாரணையில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். இந்த வழக்கை தாக்கல் செய்த நபரின் பெயர் ரத்தீஸ்குமார். அவரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவருடைய அக்காவை எங்கள் ஊரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள், அந்த அடிப்படையில் தெரியும். புகார்தாரரை எவ்வாறு தெரியும் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகார்தாரரின் முகவரி தெரியுமா என்றால் அவர் ஒழுப்பாக்கத்தை சேர்ந்தவர். எதிரி எந்த தேதியில் பணம் வாங்கி தரச்சொன்னார் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் தேதி சொல்லவில்லை, வருடம் சொல்லியுள்ளேன். எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். கடன் வாங்கிக்கொடுக்க யார் யார் எல்லாம் சென்றோம் என்றால் நானும் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் மட்டும் எதிரியுடன் சென்றோம்.

2. DC வட்டி என்றால் மாதம் 6 சதவீத வட்டி. புகார்தாரர் மாதம் 6 சதவீதம் வட்டி கேட்டார் என அவருக்கு எதிராக எதிரி காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தாரா என்றால் இல்லை. உண்மையிலேயே புகார்தாரர் மாதம் 6 சதவீத வட்டி கேட்டிருந்தால் எதிரி புகார்தாரருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார் என்றாலும், புகார்தாரர் மாதம் 6 சதவீத வட்டி கேட்கவில்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரர் எதிரிக்கு 2,50,000/- கடன் கொடுத்துள்ளார் என்றால் இல்லை, 1,00,000/-தான் கொடுத்துள்ளார். எதிரி அவரது வியாபாரத்திற்காக புகார்தாரரிடம் ரூ.2,50,000/- மாதம் 2 சதவீத வட்டிக்கு தான் வாங்கினார் என்றால் இல்லை. எதிரி எத்தனை மாதம் வட்டி கொடுத்தார் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. உண்மையிலேயே எதிரி 6 சதவீத வட்டி கொடுக்கும்போது நான் உடன் போயிருந்தால் அவர் எந்தெந்த தேதியில் வட்டி கொடுத்தார் என்ற விவரத்தை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியிருப்போன் என்றாலும், நான் சொல்வதுபோல் எதிரி வட்டி தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. எதிரி எந்த தேதியில் எங்கு வைத்து வட்டி கொடுத்தார் என்றால் தேதி ஞாபகமில்லை, பட்டரையில் வைத்து கொடுத்தார். என்னுடைய முதல் விசாரணையில் எதிரி பணம் கொடுத்த தேதியோ, இடமோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, தேதி தான் குறிப்பிடவில்லை, பட்டரையில் வைத்து கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளேன். புகார்தாரரிடம் எதிரி எந்த தொகையும் திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரி பணத்தை திருப்பி கொடுத்திருந்தால் எந்த தேதியில் எங்கு வைத்து கொடுத்தார் என்பதை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றாலும், நான் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரர் மற்றும் எதிரிக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எதிரி எந்த தேதியில் காசோலையை திருப்பி கேட்டார் என்று தேதியை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. நானும் எதிரியும் எந்த தேதியிலும் புகார்தாரரிடம் சென்று எதிரியின் காசோலையை திருப்பி கேட்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி கடனை திருப்பி கொடுத்த பிறகும் புகார்தாரர் காசோலையை தரவில்லை என அவருக்கு எதிராக புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. எதிரி ஆவணங்களை கேட்டும் புகார்தாரர் கொடுக்கவில்லை என்றால், எதிரி அவருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி புகார்தாரரிடம் பெற்ற கடனை தற்போதுவரை திருப்பி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிரி புகார்தாரரை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் காசோலையை கொடுத்து மோசடி செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.